ARTICLE 41 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00077
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 85–89
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

'கன்னிமை' - கீ.ராவின் சிறுகதை காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்

முனைவர். சந்தானலெட்சுமி கா[1,*]
[1]இணைப்பேராசிரியர் & தமிழ்த் துறைத்தலைவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். சந்தானலெட்சுமி கா — tamilseminar12@gmail.com
ORCID: முனைவர். சந்தானலெட்சுமி கா https://orcid.org/0009-0009-4031-9490

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய உலகில் மக்கள் அனைவரையும் சென்றடையும் படைப்புக்களாக சிறுகதைகள் விளங்குகின்றன. தனக்கென தனித்தோர் கரிசல் வட்டார வழக்கு நடையில் எளிமையும் உணர்ச்சியும் கலந்த சிறுகதைகளால் மக்களைக் கவர்ந்த படைப்பாளராக கி. ரா அறியப்படுகிறார். காலம் தாண்டி நிற்கும் எழுத்துப் படைப்பாக கீ.ராவின் படைப்புலகம் விளங்குகின்றது. பெண்ணின் ஆளுமை, நிர்வாகத் திறன் உபசரிப்பு மனித நேய சமூக உறவாடல்கள் திருமணத்திற்கு முந்திய நிலையில் எத்தகைய சுதந்திர உணர்வோடு, அன்றாட வாழ்வியல் நடைமுறையாகின்றது என்பதை நாச்சியார் கதாபாத்திரத்தின் வாயிலாக தனது ‘கன்னிமை’ சிறுகதையில் கீ.ரா வெளிப்படுத்துகிறார். அதனூடே கரிசல் மக்களின் பண்பாடும் புலனாகின்றது. திருமணமான பின்பு பெண்ணின் வாழ்க்கை நிலை முற்றிலும் மாறுபடுவதையும் ‘கன்னிமை’ சிறுகதை உணர்த்துகிறது கரிசல் மக்களின் வாழ்வியலை கி.ராவின் ‘கன்னிமை’ சிறுகதை வாயிலாக சமூகவியல் ஆய்வு அணுகுமுறையில் இக்கட்டுரை காண விழைகின்றது.

Keywords / திறவுச் சொற்கள்: வெங்கலச் சொம்பு; சருவைச் சட்டி; மடிப்பருத்தி; வெள்ளைப் பருத்தி; குலவை; உப்புக் கண்டம்; திருவிளக்கு; சாண உருண்டை; கம்பங்கஞ்சி; குதிரைவாலி சோறு

How to cite / மேற்கோள் காட்டும் முறை: கா, மு. ச. (2026). 'கன்னிமை' - கீ.ராவின் சிறுகதை காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

முன்னுரை

தமிழர் பண்பாட்டினை தலைமுறை தலைமுறைகளாக கொண்டு செல்லும் வலிமை கதை சொல்லிகளுக்கு உண்டு. அனைத்து மக்களின் அன்றாட வாழ்வியலோடு இணைந்ததாக கதைகள் அமைகின்றன. கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலை வட்டார வழக்கோடு கீ.ரா சிறுகதை இலக்கியங்களாகப் படைத்துள்ளார். மண் மணம் பரப்பும் கரிசல் கதைகளின் கதைகளில் கீ.ராவின் சிறுகதையான ‘கன்னிமை’ படைப்பின் வாயிலாக கரிசல் மக்களின் வாழ்வியலை சமூகவியல் ஆய்வு அணுகு முறையில் இக்கட்டுரை ஆராய விழைகின்றது.

கி.ராவின் படைப்புகள்

கீ.ராவின் கதை உலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் வாழ்க்கை நிலைப்பாடுகள் பற்றி பேசுவன ஆகும். கி. ராஜநாராயணன் என்ற

பெயருடையவரே கீ.ரா என சுருக்கமாக அறியப்படுகிறார். செப்டம்பர் 16, 1922ல் கோவில்பட்டி அருகில் உள்ள இடைச்செவல் என்னும் கிராமத்தில் தனது பெற்றோருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தவர். ஏழாம் வகுப்பு வரை படித்த கீ.ரா இயல்பிலே விவசாயி ஆவார். 1989ல் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார். படிப்பு பெற்றுத்தரும் வேலையை கீ.ராவின் படைப்புகள் அவருக்குப் பெற்றுத் தந்தன என்றால் அவரின் படைப்புகள் பெற்ற மக்கள் வரவேற்பினை அறிய முடிகின்றது.

”ஒரே கிராமத்தைச் சேர்ந்த இருவர் சாகித்திய அகாதமி விருது பெற்றது இடைசெவலில் தான்”1 எழுத்தாளர் கு. அழகிரிசாமியும் கீ.ரா வும் ஒரே தெருவில் வசித்தவர்கள். 1991ல் சாகித்ய அகாடமி விருது பெற்ற கீ.ரா பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். “நவீன இலக்கியத்தில் நாட்டார் அழகியலைப் பயன்படுத்திய முன்னோடி கி. ராஜநாராயணன் ஆவார்”2 சிறுகதைத் தொகுதிகள். நாட்டுப்புற கதைத்தொகுதிகள் நாவல்கள், அகராதி, சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம் என கி.ராவின் படைப்புலகம் விரிந்து பட்டது. இந்த இவள் (இ புத்தகம்), பெண் மனம் என்ற படைப்புகள் பெண்ணிற்கு அளிக்கும் முக்கியத்துவத்தைக் காட்டும். இவரின் படைப்புகளில் பெண்ணின் அன்றாட வேலைப்பாடுகள் அதி இயல்பாக வெளிப்படுவதை வாசித்து உணர முடியும்.

கன்னிமை சிறுகதை

“பெண்களுக்கான ஒரு நிறுவன அமைப்பாக அவர்கள் தன் குறைகளை முறையிடும், குறைகளை எடுத்துக் கூறி தீர்வு காண்பதற்கான பொதுச் சபை அரங்கமாக திகழ வேண்டும்”3 என பெண்ணிய எழுத்து பற்றி கருத்துரைக்கப்படுகின்றது. கீ.ராவின் எழுத்துக்களில் பெண்களின் அனைத்து விதமான சிக்கல்களும் ஆராயப்பட்டுள்ளன. கீ.ராவின் படைப்புகளில் பெண்ணின் ஆளுமை சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது. “இலக்கியம் சிறக்க உதவும் பலவற்றுள் பாத்திரமும் ஒன்று. உலகிடை தோன்றிய இலக்கியங்களில் பாத்திரம் இல்லாத இலக்கியமே இல்லை என்று கூறிவிடலாம்”4 சிறுகதைகளில் பாத்திரங்கள் நம்முடன் பயணிப்பவாயாக உள்ளன. அந்த வகையில் ‘கன்னிமை’ சிறுகதையில் வரும் ‘நாச்சியார்’ கதாபாத்திரமும் அமைகின்றது திருமணத்திற்கு முந்திய வாழ்க்கை பெண்ணின் திறன்களை வெளிக்கொணரும் வகையில் உள்ளதை கீ.ராவின் கதை வெளிப்படுத்துகின்றது. “சிறுகதைகள் எல்லாம் சித்திரங்கள் அவைகளை ஆக்குவதற்குக் கலைத்திறன் வேண்டும் அவை வாசிப்போரின் உணர்ச்சியை கிளப்பக்கூடியனவாகயிருக்கும்”5 என்பதற்கேற்ப நடைமுறையில் நம்மோடு பயணிப்பவர்கள் சிறுகதையின் சிறந்த கதா மாந்தர்கள் ஆகின்றனர். நடப்பியல் வாழ்க்கையின் சமூகப் பிரதிநிதியாக அவர்கள் காலம் தாண்டியும் இலக்கியங்களில் வாழ்கின்றனர். “ஒரு நூல் சிறந்த இலக்கியமா என்று காண்பதற்குக் காலமே சிறந்த கருவி போலும்”6

கி.ராவின் படைப்புகளில் சிறப்பினையும் காலமே பறைசாற்றுகின்றது. கி.ராவின் ‘கன்னிமை’ சிறுகதையில் நாச்சியார் கதாபாத்திரம் வாயிலாக அக்கால மக்களின் உணவுமுறைகள், வழிபாடு, தொழில் ஆகியன புலப்படுத்தப்படுகின்றன.

கன்னிமை சிறுகதையில் உணவு பழக்கங்கள்

உணவு முறைகள் மண்ணின் அடையாளமாகின்றன. உழைக்கின்ற மக்கள் உண்ணும் உணவு அவர்களின் உழைப்பில் உற்பத்தி செய்யப்பட்டவையாகும். அதனால் அதன் சுவையும் அதற்கான விருப்பமும் கூடுதலாக இருக்கும். உணவும் உள்ளமும் இணைவதற்கான ஒரு பாலமாக பெண்களின் விருந்தோம்பல் உள்ளது. “எங்கள் வீட்டில் கன்னி காத்த அந்த நாட்கள் எங்கள் குடும்பத்துக்கு பொன் நாட்கள். வேலைக்காரர்களுக்கும் கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால் தான் திருப்தி (கீ.ரா, பக்கம்: 126) எனும் அளவிற்கு நாச்சியார் அனைவரையும் மனநிறைவு கொள்ளும்படி உணவளிக்கிறாள். “அவளுக்கு என்னவோ அப்படி அடுத்தவர்களுக்கு படைத்து, படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்திபடுகிறாள்” (கீ.ரா, பக்கம்: 128) பெண்ணிற்கே உரிய தாய்மை உணர்வு இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

காட்டில் விளையும் சிறுதானியங்களையே கரிசல் மக்கள் உணவாகக் கொண்டதை கி.ராவின் கதைகள் விவரிக்கின்றன. கம்பஞ்சோற்றினைப் பிசைந்து, கரைத்து மோர் ஊற்றிய சருவச் சட்டியிலிருந்து வெண்கல செம்பில் மோந்து, மோர் மிளகாய், வெங்காயம், உப்பிட்ட மிளகாய் போன்றவற்றையும் நாச்சியார் தருகிறாள். இவையெல்லாம் உணவினை மேலும் ருசியாக்குகின்றன.

காலை உணவுக்கு கஞ்சி என்றால் இரவில் வெதுவெதுப்பான குதிரைவாலி சோறு போட்டு, பருப்புக் கறியும் நல்லெண்ணையும் ஊற்றுவாள். அவித்த புளி ஊற்றிய சீனிவரக்காயை வெஞ்சனமாகத் தருகிறாள். மறு சோறுக்கு ரசம் பிழிந்து உன் கையில் வயிற்றோடு மனசும் நிறைகின்றது. “பிச்சைக்காரர்களுக்கும் கூட நாச்சியார் அம்மாள் என்றால் குலதெய்வம் தான்” (கீ.ரா, பக்கம்:129) என்று கூறுமளவிற்கு நாச்சியார் பிறருக்கு உணவளிப்பதில் சிறந்த நேயத்துடன் நடந்து கொள்வதை உணர முடிகின்றது.

ஜாதி நெத்திலி வறுவல், உப்புக் கண்டம், காரமிட்ட முட்டை, வெண்ணெய்க் கட்டி என நாச்சியார் அம்மா அளிக்கும் உணவு வகைகளைப் பட்டியலிட்டு கொண்டே செல்லலாம். அந்த அளவிற்கு உணவிட்டு உபசரிக்கும் அளவிற்கு அவர்களின் வீடு வளமையாக இருந்ததையும் உணர முடிகின்றது. “தீபம் போல் வீடு முழுக்க நிறைந்திருக்கிறாள்” (கீ.ரா, பக்கம்:129) என்ற கீ.ராவின் கூற்று பெண்ணின் ஆளுமைத் திறனைக் காட்டுகிறது. பெண் உள்ள வீடே வீடாக முழுமை பெறும் என்ற மக்கள் நம்பிக்கையும் இதன் மூலம் வெளிப்படுகின்றது. அதனால் தான் ஏழெட்டு ஆண்மக்கள் உள்ள வீட்டிற்கு தத்து பெண்ணாக ‘நாச்சியார்’ வருகிறாள். பெண்இல்லா குறையை நீக்கிய பெரும் தெய்வமாகவே நாச்சியார் பார்க்கப்படுகிறாள். மண்ணின் மக்களுக்கு ‘பெண்’ செல்வத்தின் அடையாளம் ஆகும். அது காலத்தில் மாற்றத்தில் மாறியது, மக்களின் வாழ்வியல் மாற்றத்தையே உணர்த்துகின்றது.

வழிபாடு

மார்கழி மாதத்தில் வீட்டினுள்ளும் தெருவின் முற்றத்திலும் தினமும் வகை வகையான கோலங்களைப் போட்டு அழகு படுத்துவாள்.

அதிகாலையில் நீராடி திவ்யப் பிரபந்தம் பாடுவாள். இதை கேட்பவருக்கு மனப்பாடம் ஆகிவிடும். வழிபாடும் கலையும் இணை பிரியாதவையாகும் என்பதை நாச்சியாரின் வழிபாடு காட்டுகின்றது.

மரத்தினால் ஆன திருவிளக்கில் ஒளி ஏற்றி பெண்கள் புடை சூழ ராகமிட்டு பாடுவாள். விளக்கினைச் சுற்றிலும் சாண உருண்டையின் மீது அகல் விளக்கு ஏற்றப்பட்டிருக்கும். தீப ஒளி அவளின் அழகுக்கு மெருகேற்றும். “கறிக்கு உப்பைப் போல் அழகுக்கு அதிருசி கூட்டுகிறது போலும் விளக்கு”(கீ.ரா, பக்கம்:130) என்பதிலிருந்து நாச்சியாரின் அறிவாற்றலும் அழகும் ஒருங்கே வெளிப்படுத்தப்படுகின்றது.

முதல் விளைச்சலின் அடையாளமாக ஒரு கூறு பருத்தியை வழிபாட்டிற்கு உரியதாக்குவது கரிசல் மக்களின் பண்பாடாகும். தொட்டெரம்மா கோயிலின் இலந்தை முன் கோட்டையின் மேல் நாச்சியார் அம்மா ஒரு கூறு பருத்தி எடுத்து இரு கைகளிலும் ஏந்தி, பயபக்தியோடு அந்த முன் கோட்டையின் மீது போட்டார். பின்னால் வந்த பெண்கள் குலவை இட்டார்கள் என்பதிலிருந்து அறுவடையை தங்கள் வழிபடு தெய்வத்திற்கு சமர்ப்பிக்கும் கரிசல் மக்களின் பண்பாட்டினை உணர முடிகின்றது.

பருத்தி எடுத்தல்

காட்டிற்குச் சென்று பருத்தி எடுக்கும் நாச்சியர் கருவ மரத்து நிழலில் அதை கூறு வைத்து அனைவருக்கும் தருகிறாள். மடிப்பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடுபருத்தி என்று பகிர்ந்து போட பெண்கள் நாச்சியார் அம்மாவை வாழ்த்திச் சென்றார்கள். “எங்கள் வீட்டில் வேறு யார் வந்து கூறுவைத்துக் கொடுத்தாலும் போக மாட்டார்கள். நாச்சியார் அம்மாள் தான் வேணும் அவர்களுக்கு”(கீ.ரா, பக்கம்:130) என்பதிலிருந்து நாச்சியார் அம்மாவின் மனிதநேய சமூக உறவாடல் புலனாகிறது. இன்றும் கூட இட்டிலி கடைகளில் ‘பிண்ணாக்கு இட்லி’ என்று வாங்குவதைப் போலத்தான் பிள்ளைப் பருத்தி போடுதலும் உள்ளது. கரிசல் மக்கள் வாங்கித் தின்ன, பருத்தியைக் கொடுத்து தின்பண்டங்கள் வாங்கி உள்ளதையும் கி.ராவின் சிறுகதைகள் வாயிலாக அறிய முடிகின்றது.

நாச்சியாரின் கலையுணர்வு

வீட்டு வேலை, காட்டு வேலை போக மீதம் உள்ள பொழுதுகளில் தன் கலைத்திறனை வெளிப்படுத்தவும் நாச்சியார் தயங்கவில்லை. தன் கன்னிப் பருவத்தின் எண்ணங்களையும் கனவுகளையும் அதில் பதித்து பின்னுவது போல தோன்றும். நாச்சியார் அம்மா தலையனை உறைகளில் பின்னலிடுவது என்பதிலிருந்து கன்னிமை காலப் பொழுதுகள் ஒரு பெண்ணிற்கு சுகமும் சுதந்திரமும் தரக்கூடியதாக அமையும் என்பதை நாச்சியார் கதாபாத்திரம் வாயிலாக கீ.ரா உணர்த்துகிறார். நாச்சியாரின் பின்னல் வேலைகள் அவளின் கனவோடு கலந்த கற்பனை உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. தனது வேலைகளில் சுதந்திரமும் தன்னாளுகையும் உள்ள போது அவளின் மனித நேய வாசிப்பும் உயிரோட்டமாக உள்ளது. இவ்வாழ்க்கை திருமணத்திற்குப் பின்பு மாறுவதையும் கதையின் பிற்பகுதியில் எங்கே அந்த நாச்சியார்? என்று வினவும் அளவிற்கு முற்றிலும் மாறுபட்டவளாக, மூன்று குழந்தைகளின் தாயாக சுயநலமியாக, நாச்சியார் காலஓட்டத்தில் மறைந்து போவதையே ‘கன்னிமை’ சிறுகதையில் உணர்ச்சி வெளிப்பாட்டுடன் கீ.ரா

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

விவரிக்கிறார். திருமணம் பெண்ணின் வாழ்க்கையின் திசை காட்டு கருவியாக அமைகிறது. பல பெண்களின் வாழ்வில் திருமணமே முற்றுப்புள்ளி ஆகி விடுவதையும் உணர முடிவதையே கீர.ராவின் கன்னிமை சிறுகதை புலப்படுத்துகிறது.

முடிவுரை

திருமணத்திற்கு முந்திய வாழ்க்கையில் பெண்களின் ஆளுமைத் திறனில் சுதந்திரம் பேணப்படுகிறது. நிர்வாகத் திறனும் சுய வெளிப்பாடும் கற்பனை உணர்ச்சியும் கலந்த வண்ணக் கலவையாக கலைக்டாக்ஸ்கோப்பாக ஜொலிக்கும். பெண்ணின் வாழ்க்கை திருமணத்திற்குப் பின் வெள்ளித்திரையாக மாறிவிடுகின்றது என்பதை இந்த ஆய்வு ‘கன்னிமை’ சிறுகதை வாயிலாகப் புலப்படுத்துகிறது. கரிசில் வட்டார மக்களின் புழங்கு பொருட்கள், உணவுவகைகள், தொழில்முறைகள் ஆகியவற்றையும் மண்ணின் மணத்தோடு கி.ராவின் கரிசல் கதைகள் வெளிப்படுத்துவதை ‘கன்னிமை’ சிறுகதை வாயிலாக இந்த ஆய்வு உறுதி செய்கின்றது.

அடிக்குறிப்புகள் (Notes)

1. கி. ராஜநாராயணன்- தமிழ் விக்கி 22/ நவம்பர்/ 2025
2. மேலது
3. கதிர் மகாதேவன், இரா மோகன், பதிப்பு ஆசிரியர்கள், பெண்ணியம் இபதம, பக்கம்: 23 4. ஆ.சா ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, பக்கம்: 22,
4. ர. வி சுப்பிரமணியன், தற்கால தமிழ் இலக்கியம், பக்கம்: 169
5. ஆ.சா ஞானசம்பந்தன், மேலது, பக்கம்: 22

துணைநூற் பட்டியல் (References)

1. கி. ராஜநாராயணன்- தமிழ் விக்கி 22/ நவம்பர்/ 2025
2. கதிர் மகாதேவன், இரா மோகன், பதிப்பு ஆசிரியர்கள், பெண்ணியம் இபதம, வெள்ளி விழா மலர், மதுரை தியாகராசர் பல்கலைக்கழக வெளியீடு, 1994
3. ஆ.சா ஞானசம்பந்தன், இலக்கியக் கலை, கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு -1953.
4. ர. வி சுப்பிரமணியன், தற்கால தமிழ் இலக்கியம், நவயுக பிரசுராலயம், சென்னை, முதல் பதிப்பு-1942

© 2026 முனைவர். சந்தானலெட்சுமி கா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..